# என் சகோதரன் ஜானி - ஒரு நிஜவாழ்க்கை ஜேசன் போர்ன்

வெறுப்பால் வெறுப்பை அழிக்க முடியாது; அன்பாலே அது சாத்தியப்படும். இதுவே நிலையான உண்மை. -கௌதம புத்தர்-

என் அண்ணன் ஒரு இரும்பு மனிதன். அவன் ஒரு இலங்கை ராணுவ கொமாண்டோ வீரன்.

அவன் இரும்பு மனிதன் என்பதை நிறுவ இது போதாதா? மேலும் கேளுங்கள். கொமான்டோக்களுக்கான "30 நாள் நரகம்" எனும் பயிற்சியில் அவன் சிறந்த வீரனாய் தெரியப்பட்டான்.

இது மட்டுமில்லை, முதலாவது கொமாண்டோ ரெஜிமென்டின் ஆள ஊடுருவும் நாலுபேர் கொண்ட அணியில் சுய விருப்பில் சேர்ந்து, எதிரிகள் எனப் படுபவர்களின் பிரதேசத்தில் "வாழ்ந்தவன்" அவன்.

இந்த அணியினர் மிகவும் கடினமானவர்களாய் இருந்தனர். கைதாகும் பட்சத்தில் ரகசியம் காத்து மடிய வென தம் கழுத்தை சுத்தி சைனைடு குப்பிகளை கட்டி இருந்தனர்.

என் அண்ணன் எப்பேற்பட்ட இரும்பு மனிதன் என்றால், எதிரிகள் எனப்படுபவர் இவனை பெயர் சொல்லி தமது ரேடியோ சம்பாசணையில் கதைக்கும் அளவுக்கு அவர்களுக்கு அவன் சிம்ம சொப்பனமாய் இருந்தான்.

நான் ஓடும் ஒரு பேரூந்தில் ஓடிச் சென்று ஏறவே திணறும் போது, என் அண்ணன் கெலியில் இருந்து குதிப்பதிலும், ஓடும் லாண்ட் ரோவர்களில் இருந்து குதிப்பதிலும் லாவகம் கைவரப்பெற்று இருந்தான்.

ஒரு சமயம் அவன் பிரதமரின் தலைமை காவல் அதிகாரியாக இருந்தான். இன்னொரு சமயம் அவன் விமானக் கடத்தல் மற்றும் பணய கடத்தல் எதிர்ப்பு பிரிவின் தலைவராய் இருந்தான்.

இதன் பின் அவன் டெல்டா குரூப்புக்கு மாறினான். டெல்டா குருப் இரும்பு மனிதர்களின் கூட்டாயிருந்தது. காடுகளில் உரு மறைந்து வாழ்ந்து, எதிரிகள் எனப்படுபவரை டெல்டா குரூப்பினர் குறிவைத்தனர்.

தம்மை அடையாளம் காட்டக் கூடாது என்பதற்காக தம் சொந்த கழிவுகளையே தம்முடன் காவிச்செல்லும் அளவுக்கு மனம் இறுகிப் போனவர்கள் இந்த டெல்டா குரூப்பினர்.

ஜானிக்கு ஒரு பொய் அடையாளம், தேவைப்படும் போதெல்லால் வகையின்றிய பணம், இலங்கையின் எந்த கட்டிடத்திலும் எந்த இடத்துக்கும் எப்போதும் போக அனுமதியுடைய ஒரு அடையாள அட்டை, முன் அனுமதி இன்றி விமானங்களில் ஏறும் உரிமை - எல்லாம் இருந்தது .

அவன் ஒரு இரும்பு மனிதன் தான்.

துரதிஸ்டவசமாக இரும்பு மனிதனாய் இருப்பதும் சாகாவரம் பெற்றிருப்பதும் ஒன்றல்ல.

ஒரு "தேடி அழிக்கும்" தாக்குதலில், வழிகாட்டும் முன்னரங்க அணியில் சென்றபோது, ஜானி களப்பலியாகி விட்டான்.

அவன் ஒரு யுத்த வீரனாக புகழப்பட்டான். பல பதக்கங்களும் கொடுத்து அவனை கப்டன் தரத்துக்கு பதவி உயர்த்தினர். (இந்த விடயங்களை நான் சிறுமைப் படுத்தவில்லை ஆனால் இந்த பழைய பித்தளை ஓடுகளையும் பதக்கங்களையும் என் அண்ணன் திரும்பி வருவதற்கு மாற்றாக கொடுக்க, ஒவ்வொரு நாளும் நான் தயாராகவே இருக்கிறேன்).

இதுதான் என் அண்ணன். ஒரு நிஜ வாழ்க்கை ஜேசன் போர்ன். இப்படித்தான் அவன் வாழ்க்கை இருந்தது.

இதுவரை நான் சொன்னதில் சகலதும் இல்லாவிடினும், பெரும் பகுதி பொது மக்களுக்கு பத்திரிகை வாயிலாக ஏலவே தெரிந்த விடயங்களே.

ஆனால் இனி நான் சொல்லப் போவது என் அண்ணனின் வாழ்வின் மறுபக்கத்தை.

அவனின் இளைய சகோதரனாக, அவனுடன் ஒரு அறையை பகிர்ந்தவனாக, அவன் வாழ்வின் சிலகணங்களின் ஒரே சாட்சியாக, நான் சில விடயங்களை சொல்லப் போகிறேன்.

ஜானி எனக்கு எட்டு வயது மூத்தவன். நான் ஒரு சிறுவனாக இருக்கும் போது, எனது மூத்த சகோதரன் என்ற முறையில் எனது நல்வாழ்வில் ஜானிக்குப் பெரும் பொறுப்பு இருந்தது. என்னைப் பள்ளிக்கூடத்திலிருந்து கையைப்பிடித்துக் கூட்டிக் கொண்டு வருவது அடிக்கடி காணக்கூடிய ஒரு விடயமாயிருக்கும். இலங்கையின் பள்ளி வாழ்க்கை அதற்கேயுரிய 'கூத்துக்களைக்' கொண்டிராமலில்லை. நாட்டில் இனக்கலவரம் வெடித்து, போக்குவரத்தெல்லாம் தடைப்பட்டிருந்த நேரம், என்னைப் பள்ளிக்கூடத்திலிருந்து கூட்டிச் செல்வதற்காய் அவன் தனது 'கியர்' பூட்டிய சைக்கிளில் வந்து நின்றது எனக்கு இன்றும் ஞாபகத்துக்கு வருகிறது. எமது பள்ளிக்கூடம் ஒரு முறை கடும் வெள்ளத்தால் நிரம்பி வழிந்த போது, அவன் என்னைத் தனது தலைக்கு மேலாகத் தூக்கிக் கொண்டு போனதும் எனது ஞாபகத்தில் நிற்கிறது. தமக்கேயுரிய தனித்துவத்துடன் எமது அரசாங்கப் பணியாளர்கள் வெள்ளவாய்க்காலின் மூடிகளைத் திறந்து விட்டு விட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால் வெள்ளமோ சிறிது நேரத்திலேயே கான்களுக்கு மேலாக உயர்ந்து நிலம் எங்கே, திறந்த கால்வாய்கள் எங்கே என்று தெரியாதளவுக்கு ஓடிக்கொண்டிருந்தது. இப்போது நாம் திறந்த கான்களுக்குள் விழுந்து விடக்கூடிய அபாயம் இருந்ததால் ஜானி தன்னைக் கவனிப்பதிலும் பார்க்க என்னைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தான்.

ஜானி ஒரு சிறந்த விளையாட்டு வீரன். றகர், கூடைப்பந்தாட்டம், தடகளப் போட்டிகள், நீச்சல் என்று எல்லாவற்றையும் செய்வது மட்டுமல்லாது அவற்றில் விற்பன்னனாகவும் விளங்கினான். இலங்கையின் முதலாவது தேசிய துடுப்பு வலிப்பு அணி ஸ்தாபிக்கப்பட்ட போது ஜானி இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தத் தெரிவு செய்யப்பட்டான். பதினேழு வயதில் அவன் போட்டியொன்றில் கலந்து கொள்வதற்காக ஹொங்கொங் சென்றான். அது அவனது முதலாவது வெளி நாட்டுப் பயணம். அவன் திரும்பிய போது ஒரு இளைஞனிடமிருந்து எதிர்பார்க்கக் கூடிய பொருட்களையெல்லாம் - அன்று அவ் வயதினரிடையே சக்கைப் போடு போட்டுக்கொண்டிருந்த சோனி வோக்மன் உட்பட -கொண்டுவந்திருந்தான். ஆனால் எமக்கெல்லாம் ஆச்சரியமளிக்கக் கூடிய வகையில், எமது குடும்பத்துக்காக நீண்ட நாட்களுக்கு முன்னர் பணியாற்றிய

பெண்ணொருத்தியின் குழந்தைக்காக ஒரு உடுப்பையும் கொண்டு வந்திருந்தான்.

அவனது அந் நாள் காதலி அவனை விட்டுப் பிரிந்து சென்ற போது, அவன் இரவில் தூக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்ததை நான் நன்கு ஞாபகம் வைத்துள்ளேன் (அவன் படுக்காமல் இருந்ததால் எனக்கும் நித்திரை கொள்ள முடியவில்லை). அவன் எத்தனை தடவைகள் தனக்குப் பிடித்தமான காதல் தோல்விப் பாட்டொன்றைப் போட்டுக் கேட்டுக் கொண்டிருந்தான் என்று எனக்கு உண்மையில் கணக்கு வைக்க முடியவில்லை - அவ்வளவு நொந்து போயிருந்தான் என்பதை மட்டும் என்னால் சொல்ல முடியும்!

ஜானி தன் தாயை மிகவும் நேசித்தான். பதிலுக்கு அவளும் எம் எல்லோரையும் விட அவனையே செல்லம் கொஞ்சினாள் - அவனது காலம் இவ் உலகில் குறுகியதாக இருக்கப் போகின்றது என்பதைத் தெரிந்தவள் போல! இன்று யோசிக்கும் போது, அவள் அவன் மீது அப்படி அன்பைச் சொரிந்தது எனக்கு சந்தோஷத்தையே தருகிறது. எமது தாயார் புற்று நோய் சிகிச்சைக்காக அமெரிக்காவுக்குப் போக வேண்டி வந்த போது ஜானி இராணுவத்தில் இருந்தான். என்னையும் எனது தங்கையயும் போலன்றி ஜானி கடிதங்களையோ வாழ்த்துமடல்களையோ எழுதுவதில் பிரியமானவனல்லன். எனினும் அம்மாவுக்காக அவன் கடிதங்களை எழுதித் தள்ளினான். அவனுக்கு மிகவும் பிடித்தமான ஓருயிருக்காக அன்பு சொட்டச் சொட்ட அச்சொட்டான தனது கையெழுத்தில் அவன் எழுதிய பல வான்கடித உறைகள் இன்றும் என்னிடம் உள்ளன.

ஜானி தனது இராணுவப் பணியில் பல உயிர்களைக் காவெடுத்திருக்கின்றான். தனது எதிரிகளை அவன் எப்படிக் கையாண்டான் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் அவ் உயிர்ப்பலிகள் அவன் மீது மிகவும் தாக்கஞ் செலுத்திவிட்டன என்பது என்னவோ உண்மைதான். அவன் கொன்ற எதிரிகளில் சிலர் அவனது தம்பியின் வயதை ஒத்தவர்கள் என்பதை நினைக்கையிலேயே அவனுக்குத் தான் செய்யும் காரியத்தில் வெறுப்பு வந்ததை நான் நன்கு அறிவேன். அவர்கள் தனக்கு என்னை ஞாபகப் படுத்தியதாக அவன் அடிக்கடி சொல்லி வருந்துவான்.

வயதில் சிறியவனாயிருந்த போதும், எனது அண்ணனின் வாழ்க்கைப் பாதையை என்னால் நன்கு கிரகிக்கக் கூடியாதாகவே இருந்தது: ஒரு உற்சாகம் நிரம்பிய இளம் இராணுவ வீரனாக, விளையாட்டுக்காக மது அருந்தும் ஒருவனாக இருந்து, வாடி வதங்கிப் போன ஒரு இராணுவ அதிகாரியாகத் தனது மன வலியைப் போக்குவதற்காக மதுவை நாடும் ஒருவனாக அவன் மாறினான். சில சமயங்களில் அவன் இராணுவத்திலிருந்து விலகுவது பற்றியும் பேசத் தொடங்கினான்.

எனது அண்ணன் தனது பூதவுடலை 1991ம் ஆண்டு ஜுலை மாதம் 15ம் திகதி நீத்தான். தனது சக வீரனொருவனின் உடலை மீட்க முயற்சித்துக் கொண்டிருக்கும் போது எதிரியின் சினைப்பர் குண்டொன்று அவனது தலையைத் துளைத்தது. (இறந்த உடல்கள் எதிரியினால் வெற்றிச் சின்னங்களாகக் கைப்பற்றப்பட்டுக் காட்சிப் படுத்தப்படும். இது இராணுவத்தினரின் மனவுறுதிக்குப் பெருஞ்சவாலாகி விடும். அது மட்டுமல்லாது இறந்த வீரனின் குடும்பத்தினருக்கும் அது மனவுளைச்சலை ஏற்படுத்தும். இதனால் இறந்த உடல்களை மீட்பது தலையாய பணியாகவே கொள்ளப்படும்).

இது, எனது இந்தப் பத்தியில் உங்களுக்குத் தொடர்புள்ள விடயத்துக்கு என்னைக் கொண்டு வருகின்றது. நான் எனது அண்ணன் எவ்வளவு சிறந்த ஒரு மனிதன் என்று உங்களுக்குச் சொல்வதற்காக இந்தப் பத்தியை எழுதவில்லை. அது நானோ அல்லது வேறெவரோ அதைப்பற்றி எழுதினாலென்ன விட்டாலென்ன மறுக்கமுடியாத ஒரு உண்மை. அவன் எப்படியான ஒரு இரும்பு மனிதன் என்று சொல்வதற்காகவோ அல்லது ஏன் அவனைப் பலரும் ஒரு வீரனாகக் கொண்டாடினார்கள் என்று சொல்வதற்காகவோ நான் இதனை எழுதவில்லை.

ஒரு எளிய உண்மையை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே நான் இதனை எழுதுகின்றேன்: மனிதர்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளில் யாரும் வெற்றியாளனாக முடியாது. நாம் அப்படியாக உருவாக்கப்பட்டவர்களல்லர். நாம் எமக்கு எது சரியென்று படுகின்றதோஅதைச் செய்தாலும் கூட, எம்மால் வெற்றி காண முடியாது. எம்மைக் கொல்லக் கங்கணம் கட்டி நிற்கும் எதிரியையே நாம் கொல்ல

விழைகின்றோமாயினும், எமது சகோதர சகோதரிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் போது, அது எமக்கு வலியை ஏற்படுத்தவே செய்கிறது. போரும் வன்முறையும் இரண்டு பகுதியினருக்கும் தோல்வியையே ஏற்படுத்துகின்றது.

இந்தப் பத்தி நெடுகிலும், நான் எழுதி முடிக்கும் வரையிலும் என் அண்ணன் யாருக்கெதிராகப் போராடினானோ அவர்களைப் 'பயங்கரவாதிகள்' என்று நான் வர்ணிக்க மாட்டேன். அவர்களது வழிமுறைகளை நான் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர்களது செயல்களை நான் ஆதரிக்கா விட்டாலும், அவர்களை நான் அப்படி முத்திரை குத்த மாட்டேன், ஏனெனில் நான் சற்று விடயம் தெரிந்தவன். தமது வாழ்விலும் பார்க்கப் பெரியதெனத் தாம் நம்பும் ஓர் இலட்சியத்துக்காகத் தமது வாழ்வையே அர்ப்பணிப்பவர்களைப் பற்றி என்னால் அவதூறாக எழுத முடியாது. பிறர் நல்வாழ்க்கைக்காகத் தம்மை வருத்திக் கொள்பவர்களை என்னால் தாழ்த்தி எழுத முடியவில்லை. இவற்றையே எனது அண்ணனும் செய்தான். அவர்களுக்கு நான் முத்திரை குத்த வெளிக்கிட்டால், அது எனது அண்ணனுக்கும் முத்திரை குத்த வழியைத் திறப்பதாக முடியும்.

ஜானி இராணுவத்தில் இருந்தான் என்பது உண்மை. ஜனாதிபதியின் ஆணைப்படியும் அரசியலமைப்பின் கட்டளைப்படியும் நாட்டைப் பாதுகாக்க வேண்டியது அவனது பொறுப்பு என்பதும் உண்மை. அவன் பெண்களையோ சிறுவர்களையோ வயது முதிர்ந்தவர்களையோ ஆயுதமேந்தாதவர்களையோ கொல்லவில்லையென்பதும் உண்மை. அவன் செய்த கொலைகள் - குறைந்த பட்சம் ஒரு சிலரின் கண்களுக்காவது - சட்ட ரீதியான கொலைகளாகவே தெரிந்தது. இருப்பினும், ஒரு சட்டத்தரணியாகப் பணியாற்றியவன் என்ற முறையில் சட்டமும் நீதி நியாயமும் எப்போதும் ஒன்றானவையல்ல என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியும். சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைவாக செய்ய அனுமதிக்கப் படும் சில விடயங்கள் பல சந்தர்ப்பங்களில் அநீதியானவையாகவும் ஒப்புரவற்றவையாகவும் இருக்கக் கூடும். அது ஒவ்வொருவரினதும் பார்வையைப் பொறுத்தது. எனது அண்ணனால் கொல்லப் பட்டவர்களின் குடும்பத்தினருக்கு அவன் ஒரு வீரனாகவல்ல,

வில்லனாகவே தெரிவான் என்பதை நான் ஏற்றுக் கொள்வதுடன், அதை விளங்கியும் கொள்கின்றேன்.

மேலும், என் அண்ணன் போரிட்டவர்களை நான் 'எதிரியென்று சொல்லப்படக் கூடியவர்களான' என்ற பதத்தைப் பாவித்தே அழைக்கின்றேன். ஏனெனில் நான் அவர்களை எதிரிகளாகப் பார்க்கவில்லை. அவர்களும் என்னையும் என் அண்ணனையும் போலவே சுதந்திரமாகவும் சமாதானமாகவும் வாழ விரும்புகின்ற ஜீவன்களே. என் அண்ணனைப் போலவே, அவர்களும் தமது இன்னுயிர்களிலும் மேலான இலட்சியத்துக்காகத் தமது உயிரைத் துச்சமெென மதித்துப் போரிடத் துணிந்தவர்கள். என்னால் அதை மதிக்காமல் இருக்க முடியவில்லை.

நான் இதை எவ்விதம் பார்க்கின்றேன் என்றால், எம்மைப் பிரித்து, அடக்கியாளக் கங்கணம் கட்டி நிற்கும் சக்திகளினால் நாம் எல்லோரும் இத் துன்ப வலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம். அவர்களே உண்மையான பயங்கரவாதிகள். இந்த நியாயமான பார்வையிலிருந்து, அவர்களே உண்மையானஎதிரிகள் என்பதும் புரியும்.

மேலும், ஆத்மீக ரீதியில் எடுத்துக் கொண்டாலும், நாம் எல்லோரும் ஒரே தன்னுணர்வின் அங்கங்களாகவே இருப்பதால், என்னைப் பொறுத்தளவில் யாரும் யாருக்கும் எதிரியாக முடியாது. நான் இந்தத் தத்துவதை சிறிது சிறிதாக ஏற்றுக் கொள்ள என்னைப் பக்குவப்படுத்திக் கொண்டு வருகின்றேன். அறிவுபூர்வமாக இதுவே உண்மையென்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தாலும், சில சமயங்களில் என்னால் இதை ஏற்றுக் கொள்ளக் கடினமாக இருப்பது என்னவோ உண்மைதான்!

என் அண்ணனால் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு: நான் இதை என் அண்ணனின் செயலுக்கு வருத்தம் தெரிவிப்பதற்காக எழுதவில்லை. அதற்கான உரிமையும் எனக்கில்லை. ஆனாலும், என் அண்ணன் தனது நண்பர்களிடமிருந்தும் தனது அன்புக்குரியவர்களிடமிருந்தும் பிரிந்திருப்பதையிட்டுக் கவலை கொண்டிருந்தான், தனது சகாக்கள் கொல்லப்பட்டதைக் கண்டு வேதனையடந்தான், மற்றவர்களின் உயிரை எடுப்பதையிட்டு வெறுப்படைந்தான் என்பதைக் கோடிட்டுக் காட்ட நான் விழைகின்றது

உண்மையே. இவை போதாதென்றால், அவன் எல்லாவற்றுக்கும் மேலாகத் தனது உயிரையும் தியாகம் செய்தான். இது நீங்கள் எதிர்பார்க்கும் மன்னிப்புக் கோரலுக்கு ஈடாகாவிட்டாலும், உங்கள் இழப்புகள், எனது அண்ணனுக்கும் அவனை நேசித்தவர்களுக்கும் மிகுந்த துன்பத்தைக் கொடுத்தே ஏற்படுத்தப் பட்டன என்பதை உணர்வீர்கள் என்று நம்புகின்றேன். நாம் எல்லோருமே இதில் சிக்குண்டுபோயிருக்கின்றோம். நாம் எல்லோருமே இத் துன்பத்துக்குள் வாழவேண்டியேற்பட்டதையிட்டு நான் மனம் வருந்துகின்றேன். ஆயினும் எமது அனுபவத்திலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக் கொள்ளவில்லையானால், நாம் பட்ட துன்பங்களுக்கு அர்த்தமின்றிப் போய்விடும். அப்படி நடக்க நாங்கள் விடக் கூடாது.

முடிவாக, நான் சொல்ல விழைகின்றது என்னவென்றால், ஜானி என்னதான் ஒரு இரும்பு மனிதனாக இருந்தாலும், அவனது இறுதிக் கணங்களில் அவன் செய்ய முயன்றது ஒரு மனிதாபிமானப் பணியாகும். அதாவது, அவனது இறுதிப் பணி, இறந்த தனது சகாவுக்காகவும் அவனது குடும்பத்தினருக்காகவும் தனது அன்பையும் கருணையையும் வெளிப்படுத்திய ஒரு செயலாகும்.

பலருக்கும் எனது அண்ணன் துணிச்சல் மிக்க காரியங்களைச் செய்து தனது சக வீரர்களுக்காக உயிரைத்துறந்த ஒரு வீரனாகவே தெரிகின்றான். நான் அவனை இந்த வகையிலும் நேசிக்கின்றேன். எனினும், என்னைப் பொறுத்த வரையில் நான் எனது அண்ணனை ஒரு வீரனாகக் கணிக்கக் காரணம் அவன் தான் சகிக்க முடியாத சூழ்நிலைகளினூடாகத் தன் வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டியிருந்த பொழுதிலும், அவன் தனது மனித நேயத்தையும் காருண்யத்தையும் கைவிடவில்லை.

நான் மீண்டும் சொல்கின்றேன் – போரில் யாருமே வெற்றியாளன் இல்லை. இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். மீண்டும் வெறுப்புணர்ச்சியிலும் முரண்பாடுகளிலும் சிக்கிக் கொள்ளாதீர்கள். நாம் என்ன செய்தாலும், எங்கே இருந்தாலும், அன்பையும் கருணையையும் காட்டும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனித நேயம் வெற்றி பெறுகின்றது என்பதை என்றும் நினைவில் வைத்திருங்கள்.